# கொடைக்கானல் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் விதி 2(2)ன் கீழ் 01.08.2022ஆம் நாள் திங்கள் கிழமை மாலை 4.30 மணிக்கு நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/—பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

நாள். 01.08.2022

**பொருள் எண். 1)**

ஈரநீர் நிலை (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை )விதிகள் **2017** ன் கீழ் SACON (Salim Ali Centre for Ornithology and Natuarl History) நிறுவனத்தால் முன்னுரிமை அடிப்படையில் தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட உள்ள **141** ஈர நீர் நிலை (Wetland) முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் கொடைக்கானல் ஏரியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதில் இரண்டாம் கட்டமாக ஈர நீர் நிலையென அறிவிக்கப்பட உள்ள ஈர நீர் நிலை குறித்து கருத்துரு கோரப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஈரநீர் நிலை மேலாண்மைக்குழு கூட்ட நடவடிக்கை நாள்.**24.1.2020 —**ல் கொடைக்கானல் நகராட்சி ஆணையாளரால் ஏரியினை ஈரநீர் நீலையென அறிவிக்க ஆட்சேபணை செய்யப்பட்டது. எனவே, கொடைக்கானல் நகராட்சி ஆணையாளரிடம் கருத்துரு பெற்ற பின்பு, அறிவிக்கப்பட உள்ள ஈரநீர் நிலைகளின் பட்டியலில் இருந்து நீக்கம் செய்வது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

**கொடைக்கானல் ஏரியானது 1863—1867 ஆம் ஆண்டுகளில் அப்போதைய ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட ஆட்சியர் திரு.ஹென்றி லிவின்ஞ்ச் அவர்களின் முயற்சியால் செயற்கையாக மனிதரால் உருவாக்கப்பட்ட ஏரியாகும்.** இந்த ஏரியானது சர்வே வார்டு—B, பிளாக்—**30**, நகரளவு எண்—3ல் , **26.03** ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது.

இந்நகராட்சியின் மையப்பகுதியில் பிரதானமாக அமைந்துள்ள ஏரியில் **1893—**ல் இருந்து படகுகள் இயக்கப்பட்ட நிலையில் தற்போது வரை சுற்றுலா பயணிகளின் படகு சவாரிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் இந்நகருக்கு வருகை புரியும் சுற்றுலா பயணிகள் ஆண்டொன்றுக்கு சுமார் **71** இலட்சம் பேர்களின் பொழுது போக்கிற்கு பிரதானமாக இந்த ஏரியே அமைந்துள்ளது. மேலும் **1951** முதல் ஏரியில் மீன் வளர்த்தல் மற்றும் மீன் பிடித்தல் நடவடிக்கைகள், தமிழ்நாடு மீன் வளர்ச்சித்துறை மூலம் இன்றைய நாள் வரை நடைமுறையில் உள்ளது.

மேலும், கொடைக்கானல் ஏரி பகுதிகளில் நகராட்சியால் **13** ஆழ்துளை கிணறுகள் மற்றும் ஒரு திறந்த நிலை உறை கிணறு மூலமாக, நாள் ஒன்றுக்கு **7** லட்சம் லிட்டர் குடிநீர் **8** வார்டுகளுக்கு சுமார் **12000** பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்த ஏரியினை பாதுகாப்பதற்காக, கொடைக்கானல் நகராட்சி முழுமைத் திட்டம் மற்றும் **1993—**ம் வருடத்திய மலைபிரதேச கட்டிட விதி **5(5)—**ல், கொடைக்கானல் ஏரியில் இருந்து **200** மீட்டர் வரை **தடைசெய்யப்பட்ட பகுதி** என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. ஆதலால் ஏரியின் இயற்கை தன்மை மாறாமல் எந்தவித ஆக்கிமிப்புகளோ, கட்டுமானங்களோ, ஏற்பாடாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் ஏரியை சுற்றியுள்ள பகுதிகள் முழுவதும் கம்பிவேலி அமைக்கப்பட்டு, குப்பைகள் மற்றும் கழிவுகள் கொட்டாமல் பாதுகாக்கப்படுவதோடு ஆக்கிரமிப்புகளுக்கு உட்படாமலும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மேலும், அரசாணை நிலை எண். 105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 26.6.2009ன்படி மேற்படி ஏரியின் கட்டுப்பாடு மற்றும் உரிமை முழுவதும் கொடைக்கானல் நகராட்சியையே சேரும். அதன்படி, ஏரியில் படகு விடுவதன் மூலம் பெறப்படும் உரிம கட்டணம் மற்றும் அனுமதிக் கட்டணம் மூலம் பெறும் வருவாயினை கொண்டு, ஏரியினை பராமரிப்புக்கும், பாதுகாப்பிற்கும் செலவிடப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால் ஏரியினை தொடர்ந்து பாதுகாத்திடவும், அதன் சுற்றுச்சூழல் தன்மை மாறாமல் பராமரித்திடவும் போதுமான நிதி ஆதாரஙகள் உள்ளது.

மேலும், ஈரநீர் நிலை (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை )விதிகள் 2017 ல் காணும் ஈரநீர்நிலைகள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை விதிகள் 2017ல், கீழ்க்கண்டவாறு ஈரநீர் நிலைகள் என்பதற்கு வரையறுக்கப்பட்டுள்ளது..

**Rule No: 2 (1)g**

"Wetlands means an area marsh, fen, peatland or water whether natural or artificial, permanent or temporary with water that is static or flowing fresh, brackish or salt including areas of marine water the depth of which at low tide does not exceed six metres, **<u>but does not include river channels, paddy fields, human-made water bodies/tanks specifically constructed for drinking water purposes and structures specifically constructed for aquaculture, salt production, recreation and irrigation purposes.</u>**

மேற்கண்டவாறு ஈரநீர்நிலை வரையரையின்படி, மனிதனால் உருவாக்கப்பட்டு, குடிநீர் பயன்பாட்டிற்கு பயன்படுத்துவதோடு, சுற்றுலாவின் முக்கிய இடமாவதாலும், பொழுது போக்கிற்காகவும், மீன்படிப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருவதால் **விதி 2 (1) g**ன்படி ஈரநீர் நிலை என்பதில் இருந்து கொடைக்கானல் ஏரி விலக்கு பெறுகிறது.

எனவே, கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான ஏரியினை அறிவிக்கப்பட உள்ள ஈர நீர் நிலை (Wetland) பட்டியலில் இருந்து நீக்கம் செய்திட கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மற்றும் மாவட்ட வன அலுவலர், திண்டுக்கல் அவர்களுக்கும் இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 1365/2019/எப்.1 நாள். 02.08.2021 ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, கொடைக்கானல் ஏரியினை இரண்டாம் கட்டமாக அறிவிக்கப்பட உள்ள ஈர நீர் நிலை (Wetland) பட்டியலில் இருந்து ஈரநீர்நிலை (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள் 2017 ன் விதி எண். 2(1) g ன் படி நீக்கிட, தமிழ்நாடு மாநில ஈரநிலை ஆணையம், சென்னை மற்றும் மாவட்ட ஈரநீர்நிலை மேலாண்மைக்குழுவினை கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

கொடைக்கானல் நகரின் முக்கிய சுற்றுலா இடமாகவும், இந்நகருக்கு வருகை புரியும் சுற்றுலா பயணிகளை பெரிதும் கவரும் விதமாகவும், உள்ளுர் மற்றும் வெளியூர் சுற்றுலா பயணிகள் நடைபயிற்சி மேற்கொள்வதோடு பொழுது போக்கிற்காக அமைந்துள்ள இந்த நட்சத்திர வடிவிலான மனிதனால் உருவாக்கப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான செயற்கையான ஏரியினை, இரண்டாம் கட்டமாக கொடைக்கானல் நகரின் குடிநீர் தேவைக்காக ஆழ்துளை கிணறுகள் மற்றும் நீர் ஊற்று அமைந்துள்ளதாலும் ஈரநீர்நிலை (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள் 2017 ன் விதி எண். 2(1) g ன் படி நட்சத்திர ஏரியினை இரண்டாம் கட்டமாக அறிவிக்கப்பட உள்ள ஈர நீர் நிலை (Wetland) பட்டியலில் இருந்து நீக்கிட தமிழ்நாடு மாநில ஈரநிலை ஆணையம், சென்னை மற்றும் மாவட்ட ஈரநீர் நிலை மேலாண்மைக்குழுவினை கோரிடலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | 144, நாள்.01.08.2022 |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அரசாணை நிலை எண். 105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 26.6.2009ன்படி கொடைக்கானல் ஏரியின் முழு கட்டுப்பாடும் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகரின் வாழ்வாதாரம் ஏரியின் சுற்றுலாவினை நம்பியே அமைந்துள்ளது. மேலும், இந்த ஏரியானது செயற்கையாக உருவாக்கப்பட்ட ஏரியாகும். இந்த ஏரியில் படகு சவாரி, மிதிவண்டி சவாரி, குதிரை சவாரி , தினசரி நடைபயிற்சி போன்ற பொழுது போக்கு அம்சங்கள் தினசரி வாழ்வோடு இணைந்துள்ளது. மேலும், இந்த ஏரியானது மனிதனால் உருவாக்கப்பட்டு, குடிநீர் பயன்பாட்டிற்கு பயன்படுத்துவதோடு, சுற்றுலாவின் முக்கிய இடமாவதாலும், பொழுதுபோக்கிற்காகவும் , மீன்பிடிப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருவதால் **விதி 2 (1) ன்படி** ஈரநீர் நிலை என்பதில் இருந்து கொடைக்கானல் ஏரி விலக்கு பெறுகிறது. எனவே, நகர்மன்ற கூட்டத்திற்கு வருகை புரிந்த உறுப்பினர்களின் முழு ஆதரவோடு ஈரநீர்நிலை (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள் 2017 ன் விதி எண். 2(1) g ன் படி, கொடைக்கானல் ஏரியினை ஈரநீர் நிலை என இரண்டாம் கட்டமாக அறிவிக்கப்பட உள்ளதை இந்நகர்மன்றம் ஆட்சேபணை செய்கிறது. மேலும், இரண்டாம் கட்டமாக அறிவிக்கப்பட உள்ள ஈர நீர் நிலை (Wetland) பட்டியலில் இருந்து கொடைக்கானல் ஏரியினை நிரந்தரமாக நீக்கிட கோரி, தமிழ்நாடு மாநில ஈரநீர்நிலை ஆணையம், சென்னை மற்றும் மாவட்ட ஈரநீர்நிலை மேலாண்மைக்குழுவினை கோரிடவும் மன்றத்தில் ஏகமனதாக தீர்மானித்து அனுமதி வழங்கப்படுகிறது. |

ஒம்/-பா.செல்லத்துரை,
**நகர்மன்றத் தலைவர்,**
**கொடைக்கானல் நகராட்சி.**

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.